


மியாட் ஆஸ்பத்திரியில் சிக்கலான இருதய அறுவை சிகிச்சை செய்துகொண்ட வாலிபர் பெனுவுக்கு மியாட் மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ் வாழ்த்து தெரிவித்த போது எடுத்தபடம். அருகில் அறுவை சிகிச்சை செய்த டாக்டர் வி.வி.பாஷி, டாக்டர் செழியன் மற்றும் உஷா பார்த்தசாரதி ஆகியோர் படத்தில் உள்ளனர்.

### ரத்தம் உறையாத ஹீமோபீலியா நோயால் பாதிக்கப்பட்ட

# வாலிபருக்கு சிக்கலான இருதய அறுவை சிகிச்சை

## மியாட் ஆஸ்பத்திரியில் வெற்றிகரமாக நடந்தது

சென்னை,ஏப்.11–

ரத்தம் உறையாத ஹீமோபீலியா நோயால் பாதிக்கப்பட்ட வாலிபருக்கு சிக்கலான இருதய அறுவை சிகிச்சையை மியாட் ஆஸ்பத்திரி டாக்டர்கள் வெற்றிகரமாக செய்து முடித்தனர். சென்னை மியாட் ஆஸ்பத்திரியின் நிறுவனர் டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது:–

### ஆண்களை தாக்கும் நோய்

மனிதர்களுக்கு உடம்பில் எந்தக்காயம் ஏற்பட்டாலும் உடனே உடம்பில் இருந்து ரத்தம் வெளியேறும். அந்த ரத்தம் அடுத்த சில வினாடிகளில் நின்றுவிடும். ஆனால் எந்தக்காயம் பட்டாலும் ரத்தம் வெளியேறிக்கொண்டு இருப்பதை ஹீமோபீலியா நோய் என்று அழைக்கிறோம்.

இந்தியாவில் ஹீமோபீலியா நோயால் 18 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நோய் ஆண்களை தாக்கும் நோயாகும். தமிழ்நாட்டில் 1800 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### வாலிபருக்கு ஹீமோபீலியா

இந்த நிலையில் கேரளா வைச்சேர்ந்த பெனு என்ற 38 வயது வாலிபர், மியாட் ஆஸ்பத்திரிக்கு இருதய கோளாறுடன் அதாவது பெரிய ரத்தக்குழாய்(பெருந்தமணி) வால்வு கசிவோடு வந்தார். மேலும் அவரது ரத்தக்குழாய் நெளிவு பெரிதும் வீங்கி இருந்தது. அவர் ஹீமோபீலியா நோயாளியாகவும் இருந்தார். அவருடைய உடலை இருதய அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் வி.வி.பாஷி உள்ளிட்ட பல்வேறு துறை நிபுணர்கள் பரிசோதனை செய்தனர்.

இருப்பினும் அவருக்கு பெரிய ரத்தக்குழாய் வால்வு கசிவை நிறுத்துவதற்காக இருதயத்தை அறுவை சிகிச்சை செய்யவேண்டும். அவ்வாறு செய்தால் உலோகம் கொண்டு உருவாக்கப்படும் செயற்கை வால்வை பொருத்துவதும் அவருக்கு சிக்கலான பிரச்சினை. அவருடைய உயிருக்கு ஆபத்து என்பதை உணர்ந்தோம். அவருக்கு உலோக வால்வுக்கு பதிலாக உயிரியல் செயற்கை வால்வு பொருத்தினாலும் அதன் ஆயுள் 10 அல்லது 12 ஆண்டுகள்தான்.

### சிக்கலான இருதய அறுவை சிகிச்சை

எனவே சிக்கலான இந்த அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக முடிக்க மியாட் மருத்துவமனையின் டாக்டர்கள் நினைத்தோம். இதற்காக 20–க்கும் மேற்பட்ட பல்வேறு துறை டாக்டர்கள் கலந்தாலோசித்து அவரது அறுவை சிகிச்சை குறித்து துல்லியமாக திட்டமிட்டோம்.

சிக்கலான இருதய அறுவை சிகிச்சை காலை 8 மணிக்கு தொடங்கப்பட்டது. நோயாளிக்கு ரத்தப்போக்கு ஏற்படும் என எதிர்பார்த்தோம். ஒவ்வொரு ரத்தப்போக்கு வருவதற்கு முன்பாக, முன் எச்சரிக்கையாக, நாங்கள் அறுவை சிகிச்சையின் அடுத்த கட்டத்திற்கு செல்வதற்கு முன்பாக ரத்தப்போக்கை அதற்கான ரத்த உறைவு காரணிகள் வைத்து நிறுத்தினோம். பின்னர் நோயாளி, இருதயம் –நுரையீரல் எந்திரத்தில் இணைக்கப்பட்டார். இதையொட்டி அவரது இருதய துடிப்பை நிறுத்தினோம்.

### வெற்றிகரமாக நடந்தது

பாதிக்கப்பட்ட ஏறுமுக பெரிய (பெருந்தமணி) ரத்தக்குழாய்க்கு பதிலாக செயற்கை ஒட்டு பொருத்தப்பட்டது. பிறகு அவருடைய வால்வு, பழுது நீக்கி ஏற்கனவே பொருத்தப்பட்ட ஒட்டுடன் பொருத்தப்பட்டது. இதைத்தொடர்ந்து நோயாளி, இருதயம் நுரையீரல் எந்திரத்தில் இருந்து விடுவிக்கப்பட்டார். பகல் 3 மணிக்கு அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிவடைந்தது. 7 மணிநேரம் இந்த அறுவை சிகிச்சை நடந்தது. ரத்தத்தை உறைய வைப்பதற்கான காரணிகள் அவருக்கு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

ஹீமோபீலியா நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிக்கு சிக்கலான இருதய அறுவை சிகிச்சை, இதற்கு முன்பாக இதுவரை உலகளவில் நடந்ததே இல்லை. இந்த அறுவை சிகிச்சையை இருதய அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் வி.வி.பாஷி, குருதியியல் நிபுணர் டாக்டர் செழியன், மயக்கமருந்துநிபுணர் டாக்டர் அஜூ ஜேக்கப் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட டாக்டர்கள் மற்றும் நர்சுகள், சுகாதாரத் துறை ஊழியர்கள் ஈடுபட்டனர்.

இவ்வாறு டாக்டர் பி.வி.ஏ.மோகன்தாஸ் தெரிவித்தார்.

பேட்டியின்போது மியாட் ஆஸ்பத்திரியின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ் அருகில் இருந்தார்.